# கந்தர் சஷ்டி கவசம்



தொகுப்பாளர்
கண்டமங்கலம் K.S. கோபால தீக்ஷிதர்
www.kandamangalam.com

## காப்பு

துதிப்போர்க்கு வல்வினை போம்; துன்பம்போம்; நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்-கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும், நிமலரருள் கந்தர்
சஷ்டி கவசம் தனை.

அமர ரிடர்தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

## நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார் - சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை - கீதம் பாடக் கிண்கிணி யாட (01)

மையல் நடனஞ்செய்யும் மயில்வா கனனார் - கையில் வேலால் எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக - வருக வருக மயிலோன் வருக (02)

இந்திரன் முதலா எண்டிசை போற்ற - மந்திர வடிவேல் வருக வருக!
வாசவன் முருகா வருக வருக - நேசக் குறமகள் நினைவோன் வருக (03)

ஆறுமுகம் படைத்த ஐயா வருக - நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக! - சரவண பவனார் சடுதியில் வருக (04)

ரவண பவச ர ர ர ர ர ர ர - ரிவண பவச ரி ரி ரி ரி ரி ரி ரி
விபச சரவண வீரா நமோநம - நிபவ சரவண நிறநிற நிறென (05)

வசுர வணப வருக வருக - அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில் - பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும் (06)

பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க - விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சவ்வும் - உய்யொளி சௌவும் உயிரைங் கிலியும் (08)

கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும் - நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும் - குண்டலி யாஞ்சிவ குகன் தினம் வருக! (09)

ஆறு முகமும் அணிமுடி ஆறும் - நீறிடு நெற்றியில் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும் - நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும் (10)

ஈராறு செவியில் இலகுகுண் டலமும் - ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து - நன்மணி பூண்ட நவரத்ன மாலையும் (11)

முப்பரி நூலும் முத்தணி மார்பும் - செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும் - நவரத்தினம் பதித்த நற்சீ ராவும் (12)

இறுதொடை யழகும் இணைமுழந் தாளும் - திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண - மொகமொக மொகமொக மொகமொக மொகென (13)

நகநக நகநக நகநக நகென - டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர - ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி (14)

டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு - டகுடகு டிகுடிகு ட ங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து - முந்து முந்து முருகவேள் முந்து (15)

என்றனை யாளும் ஏரகச் செல்வ - மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும் - லீலா லீலா லீலா விநோ தனென்று (16)

உன் திருவடியை உறுதியென் றெண்ணும் - எந்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க - பன்னிரு விழியால் பாலனைக் காக்க (17)

அடியேன் வதனம் அழகுவேல் காக்க - பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க - விதிசெவி இரண்டும் வேலவர் காக்க (18)

நாசிகளி ரண்டும் நல்வேல் காக்க - பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க - செப்பிய நாவைச் செவ்வேல் காக்க (19)

கன்னமி ரண்டும் கதிர்வேல் காக்க - என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை ரத்ன வடிவேல் காக்க - சேரிள முலைமார் திருவேல் காக்க (20)

வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க - பிடரிக ளிடண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க - பழுபதி னாறும் பருவேல் காக்க (21)

வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க - சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க - ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க (22)

பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க - பணைத் தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க - வட்டக் குதத்தை வல்வேல் காக்க (23)

ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க - கைகளி ரண்டும் கருணைவேல் காக்க
முன்கையி ரண்டும் முரண்வேல் காக்க - பின்கையி ரண்டும் பின்னவள் இருக்க (24)

நாவில் சரஸ்வதி நற்றுணை யாக - நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க - எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க (25)

அடியேன் வதனம் அசைவுள நேரம் - கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க - அரையிருள் தன்னில் அனையவேல் காக்க (26)

ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க - தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க - நோக்க நோக்க நொடியில் நோக்க (27)

தாக்க தாக்க தடையறத் தாக்க - பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல - வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள் (28)

அல்லற் படுத்தும் அடங்கா முனியும் - பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும், குறளைப் பேய்களும் - பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட - இரிசு காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும் (29)

கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும் - விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர் களும் - என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட (30)

ஆனை யடியினில் அரும்பா வைகளும் - பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும் - பாவைக ளுடனே பலகல சத்துடன் (31)

மனையிற் புதைத்த வஞ்சனை தனையும் - ஒட்டியச் செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும் - ஓதும் அஞ்சனமும் ஒருவழிப் போக்கும் (32)

அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட - மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட - அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட (33)

வாய்விட் டலறி மதிகெட் டோட - படியினில் முட்ட பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு - கட்டி உருட்டு கைகால் முறிய (34)

கட்டு கட்டு கதறிடக் கட்டு - முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக - சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு (35)

குத்து குத்து கூர்வடி வேலால் - பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக - விடு விடு வேலை வெகுண்டது வோடப் (36)

*புலியும் நரியும் புன்னரி நாயும் - எலியும் கரடியும் இனித் தொடர்ந் தோட*
*தேளும் பாம்பும் செய்யான் பூரான் - கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம் (37)*

*ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க - ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்*
*வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம் - குலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு (38)*

*குடைச்சல் சிலந்தி குடல்விப் புருதி - பக்கப் பிளவை படர்தொடை வாழை*
*கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி - பற்குத் தரணை பருஅரை யாப்பும் (39)*

*எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால் - நில்லா தோட நீஎனக் கருள்வாய்*
*ஈரேழு உலகமும் எனக் குறவாக - ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா (40)*

*மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும் - உன்னைத் துதிக்க உன் திரு நாமம்*
*சரவண பவனே சைலொளி பவனே - திரிபுர பவனே திகழொளி பவனே (41)*

*பரிபுர பவனே பவமொளி பவனே - அரிதிரு மருகா அமரா வதியைக்*
*காத்துத் தேவர்கள் கடும்சிறை விடுத்தாய் - கந்தா குகனே கதிர்வே லவனே (42)*

*கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை - இடும்பனை யழித்த இனியவேல் முருகா*
*தனிகா சலனே சங்கரன் புதல்வா - கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா (43)*

*பழநிப் பதிவாழ் பாலகு மாரா - ஆவினன் குடிவாழ் அழகிய வேலா*
*செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா - சமரா புரிவாழ் சண்முகத் தரசே (44)*

*காரார் குழலால் கலைமகள் நன்றாய் - என்நா இருக்க யானுனைப் பாட*
*எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப் - பாடினேன் ஆடினேன் பரவச மாக (45)*

*ஆடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை - நேச முடன்யான் நெற்றியில் அணிய*
*பாச வினைகள் பற்றது நீங்கி - உன்பதம் பெறவே உன்னரு ளாக (46)*

*அன்புடன் இரட்சி அன்னமுஞ் சொன்னமுந் - மெத்தமெத் தாக வேலா யுதனார்*
*சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க - வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க (47)*

*வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க - வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க*
*வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன் - வாழ்க வாழ்க வாரணத் துவசம் (48)*

*வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க - எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்*
*எத்தனை அடியேன் எத்தனை செயினும் - பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன் (49)*

பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே - பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதும் மனமகிழ்ந் தருளித் - தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய் (50)

கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய - பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும் - ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி (51)

நேசமுடன் ஒரு நினைவது வாகிக் - கந்தர் சஷ்டிக் கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள் - ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு (52)

ஓதியே செபித்து உகந்துநீ றணிய - அஷ்டதிக் குள்ளோர் அடங்கிலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங்கு அருளுவர் - மற்றவ ரல்லாம் வந்து வணங்குவர் (53)

நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும் - நவமதனெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரட்டாய் வாழ்வார் - கந்தர்கை வேலாம் கவசத் தடியை (54)

வழியாய்க் காண மெய்யாய் விளங்கும் - விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும் - நல்லோர் நினைவில் நடனம் புரியும் (55)

சர்வ சத்ரு சங்கா ரத்தடி - அறிந்தென துள்ளும் அஷ்ட லட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச் - சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த (56)

குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும் - சின்னக் குழந்தை சேவடி போற்றி!
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம் - மேவிய வடிவுறும் வேலவா போற்றி! (57)

தேவர்கள் சேன பதியே போற்றி! - குறமகள் மனமகிழ் கோவே போற்றி!
திறமிகு திவ்விய தேகா போற்றி! - இடும்பா யுதனே இடும்பா போற்றி! (58)

கடம்பா போற்றி கந்தா போற்றி! - வெட்சி புனையும் வேளே போற்றி!
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே! - மயில்நட மிடுவாய் மலரடி சரணம்! (59)

சரணம் சரணம் சரவண பவஓம் - சரணம் சரணம் சண்முகா சரணம்! (60)

***** ஓம் *****